ன் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 05.08.2026 புதன்கிழமை இதழ் : 211 பக்கங்கள் : 08



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# மஹர சிறைக் கலவரம் திட்டமிட்ட நாசவேலை!

## வெளிப்புற தொடர்புகள் குறித்தும் விசாரணை என்கிறார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஓக. 05

மஹர சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவம், திட்டமிட்ட நாசவேலை மற்றும் தீவைப்பு நடவடிக்கைகளின் அறிகுறிகளைக் கொண்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட அமைச்சர், இது சாதாரண கைதிகளுக்கிடையிலான மோதல் அல்ல என்றும், சிறை நிர்வாகத்தை செயலிழக்கச் செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியாக இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதாகவும் கூறினார்.

07

## இந்திய வெளிவிவகார செயலர் இன்று இலங்கைக்கு வருகிறார்!

### தமிழ் அரசியல் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



கொழும்பு, ஓக. 05

இந்திய வெளிவிவகார செயலர் விக்ரம் மிஸ்ரி, இரு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று புதன்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் முக்கிய விடயங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, வடக்கு - கிழக்கு மற்றும் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் இந்திய வெளிவிவகார செயலர் தனித்தனியாக சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புகளின் போது, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக

07

## அழைப்பாணை கிடைத்ததும் நீதிமன்றில் ஆஜராகவேண்டும்

### யோஷித, கரன்னகொடவுக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட ஆகியோர், அழைப்பாணை கிடைத்ததும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு

07

## செம்மணி புதைகுழி அகழ்வு மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 05

செம்மணி மனித புதைகுழியில் மழை அங்கியுடன் அடையாளம் காணப்பட்டதாக கருதப்படும் சிறுவர் ஒருவரின் எலும்புக்கூடு முழுமையாக அகழ் ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி

07

## சீரற்ற காலநிலை: 8 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 05

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் 3,014 குடும்பங்களைச் சேர்ந்த 11,832 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த

07

## ஒழுக்கமான பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலும் ஒரு வருட சேவை நீடிப்பு திட்டம்!

### அமைச்சர் ஆனந்த விஜேபால தகவல்


கொழும்பு, ஓக. 05

60 வயதை கடந்தும் சிறந்த ஒழுக்கத்துடன் பணியாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலும் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினால் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு

07

## யாழ். சர்வதேச விளையாட்டு மைதானத்தின் பணிகள் இரு மாதங்களுக்குள் மீள ஆரம்பம்!



### அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாண சர்வதேச விளையாட்டு மைதானத்தின் இடைநிறுத்தப்பட்ட நிர்மாணப் பணிகள் அடுத்த 1 முதல் 2 மாதங்களுக்குள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தையிட்டி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்ட மைதான நவீனமயமாக்கல் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு

07

## யாழ். சர்வதேச விமான நிலையக் காணி இழப்பீட்டு கலந்துரையாடலில் பதற்றம்!

### கூட்ட மண்டபத்துக்குள் பொலிஸார் அழைப்பு



யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விரிவாக்கத்திற்காக சுவீகரிக்கப்பட்ட மற்றும் சுவீகரிக்க அடையாளம் காணப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுடன் நடைபெற்ற இழப்பீட்டு கலந்துரையாடல் கடும் குழப்பநிலையுடன்

07

## நீதிபதிகளின் ஓய்வு வயது நீடிப்பு; மகாநாயக்கர்களின் எதிர்ப்பு கடிதம் எதுவுமே எனக்குக் கிடைக்கவில்லை!

### சபையில் கூறினார் நீதி அமைச்சர்

கொழும்பு, ஓக. 05

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை நீடிப்பது தொடர்பான முன்மொழியப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்துக்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் கடிதம் அனுப்பியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்திருந்த போதிலும், தமக்கு அவ்வாறான எந்தக் கடிதமும் கிடைக்கவில்லை என நீதி அமைச்சர்

07

## வடக்கில் சிறுபோக நெற்செய்கை எதிர்பார்த்த இலக்கை விஞ்சியது!

### மூன்றாம் போகச் செய்கையும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 05

வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை எதிர்பார்க்கப்பட்ட இலக்கை விட அதிகமான பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மூன்றாம் போகச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

07

## குட்டிமணி, தங்கத்துரைக்கு சிலை நிறுவ இன்று வரை தற்காலிக தடை

யாழ்ப்பாணம், ஓக. 05

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலையில் உயிரிழந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர்களான குட்டிமணி மற்றும் தங்கத்துரைக்கு சிலை நிறுவுவதற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் இன்று புதன்கிழமை வரை தற்காலிகத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் 43ஆவது நினைவு நாளை முன்னிட்டு, அவர்களது சொந்தக் காணியில் சிலை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனையடுத்து, கடந்த ஜூலை 22ஆம் திகதி முன்னாள் வல்வெட்டித்துறை

07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அஸ்வெசும பயனாளிகளின் தெரிவுக்கு புதிய முறைமை!

## சமூக-பொருளாதார நிலைமைகளுக்கு முன்னுரிமை

கொழும்பு, ஓக. 05

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக, குடும்பங்களின் சமூக-பொருளாதார பாதிப்பு நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய மதிப்பீட்டு முறைமையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் விஜேசிறி பஸ்நாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த புதிய முறைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

புதிய தெரிவு முறையில் குடும்பத்தின் வாழ்வாதார பாதுகாப்பு, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, முதியோர், மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயாளிகள், இருப்பிட வசதி, அடிப்படைச் சேவைகளுக்கான அணுகல் மற்றும் கடன்பாடுகள் உள்ளிட்ட சமூக-பொருளாதாரக் காரணிகள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன.

தற்போதைய பயனாளிகள் தெரிவு முறையில் காணப்படும் குறைபாடுகளைச் சீரமைக்கும் நோக்கில், நடைமுறையில் உள்ள அளவுகோல்களை மறுபரிசீலனை செய்ய பாராளுமன்றக் குழு அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளது.

நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த புதிய முறைமையின் செயல்திறனை மதிப்பிடும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்த நலன்புரி நன்மைகள் சபை தீர்மானித்துள்ளது.

## புங்குடுதீவு சிறீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா!

யாழ்ப்பாணம், ஓக. 05

தீவகத்தின் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றான புங்குடுதீவு சிறீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் தனது நூற்றாண்டு நிறைவை இன்று புதன்கிழமை பாடசாலை மைதானத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடவுள்ளது.

"ஒரு நூற்றாண்டு கல்விப் பயணம்... தொடரும் எங்கள் சேவையின் கனவு..." எனும் பொன்மொழியுடன் பாடசாலை அதிபர் வ. அருட்செல்வன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் காலை அமர்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஞானசுந்தரனும் சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலர் த. அகிலனும், கௌரவ விருந்தினராகவங்கி முகாமையாளரும் நூற்றாண்டு விழா ஒருங்கிணைப்பாளரும் பழைய மாணவியுமான க. செந்திலும், மாலை அமர்வில் சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் த. லெனின் அறிவழகன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் ம. தனபாலசிங்கம், ஓய்வுநிலை அதிபர் ம. சுப்பிரமணியம், ஓய்வுநிலை அதிபர் நா. பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு வித்திட்ட பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்நிகழ்வில் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## "பனை வாழ்வின் விருட்சம் நாட்டின் சுவீட்சம்" தேசிய கண்காட்சி வவுனியாவில் 3 தினங்கள்!

வவுனியா, ஓக. 05

வவுனியாவில் "பனை வாழ்வின் விருட்சம் நாட்டின் சுவீட்சம்" எனும் தொனிப்பொருளில் தேசிய கண்காட்சி இடம்பெறவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் ராசா ரவீந்திரன் தெரிவித்தார்.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில், "பனை வாழ்வின் விருட்சம் நாட்டின் சுவீட்சம்" எனும் தொனிப்பொருளில் தேசிய கண்காட்சி இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சி வவுனியா மாநகரசபை மைதானத்தில் 07 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதியமைச்சர்களான சுந்தரலிங்கம் பிரதீப் மற்றும் உபாலி சமரசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், நீண்ட காலமாக இத்துறையில் பணியாற்றி வரும் மூத்த பனையேறும் வல்லுநர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சியில் 100 இற்கும் மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் இருந்து 60 இற்கு மேற்பட்டவர்களும், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களை பிரதிநிதிப்படுத்தியும், தென் மாகாணத்தில் இருந்தும் முறைசார் உற்பத்தியாளர்களால் பனைசார் தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன-என்றார். (அ)

## பொலிஸ்மா அதிபர் குறித்து சாகர கருத்து: உடன் விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு!

கொழும்பு, ஓக. 05

பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய குறித்து பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட சாகர காரியவசம், தற்போதைய பொலிஸ்மா அதிபர் அரசாங்கத்துக்கு அல்லாது அரசுக்கும் மக்களுக்குமே சேவையாற்ற வேண்டும் என்றும், 37ஆவது பொலிஸ்மா அதிபர் தெருவில் மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த பொலிஸ்மா தலைவர் என்ற பெயரில் வரலாற்றில் இடம் பிடிப்பதை தாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து பதிலளித்த அமைச்சர் ஆனந்த விஜேபால, இவ்வாறான கருத்துக்களை அரசாங்கம் இலகுவாக எடுத்துக் கொள்ளாது என்றும், சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், இத்தகைய கருத்துக்கள் கடந்த காலத்தில் அரசியல் அதிகாரத்திற்காக மக்களைப் பலி கொடுத்த அரசியல் இயக்கத்தின் மனநிலையை பிரதிபலிப்பதாகவும், இது மிகவும் பொறுப்பற்ற செயற்பாடாகும் என்றும் அமைச்சர் விமர்சித்தார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபர் தனது கடமைகளை திறம்பட நிறைவேற்றி வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், ஊழல், கையூட்டல் மற்றும் அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் அச்சமடைந்தவர்களே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றனர் என்றும் தெரிவித்தார். (அ)

## நெடுந்தீவில் சுற்றுலா சேவைகள் குறித்து சுற்றுலாத்துறை பிரதியமைச்சர் ஆராய்வு




யாழ்ப்பாணம், ஓக. 05

நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க அங்கு சுற்றுலா சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்னைகள் குறித்து விரிவான கலந்துரையிடலில் ஈடுபட்டார்.

எதிர்வரும் காலங்களில் நெடுந்தீவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் உள்ளூர் மக்களுக்கு உருவாகும் பொருளாதார வாய்ப்புகள் தொடர்பாக அதன் போது பிரதி அமைச்சர் விரிவாக விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ச. சிறீபவானந்தராஜா, ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நெடுந்தீவு பிரதேச செயலாளர், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

## செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் 110 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு!



வவுனியா, ஓக. 05

வவுனியா செட்டி குளம் மகாவித்தியாலயம் தனது 110ஆவது ஆண்டு நிறைவு விழாவை நேற்று முன் தினம் பாடசாலை வளாகத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடியது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேடமாக 110ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில், 110 பானைகளில் பொங்கல் வைத்து சிறப்பு பொங் கல் நிகழ்வு நடைபெற்றது.

விருந்தினர்கள் மங்கள வாத்தியம் முழங்க அழைத்து வரப்பட்டதுடன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரதான நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஏனைய விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

110 ஆண்டுகால கல்விச் சேவையை நினைவு கூரும் இந்நிகழ்வு, பாடசாலையின் வரலாற்றுச் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலாசார மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

செட்டிகுளம் மகாவித்தியாலம் 1916ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கடந்த 110ஆண்டுகளாக அந்தபகுதி மக்களின் கல்வி, பண்பாடு, ஒழுக்கம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பை இப்பாடசாலை வழங்கி வருவதுடன் பல ஆளுமைகளையும் உருவாக்கியுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அழைப்பாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். (அ)

## கொழும்பு - கண்டி பிரதான வீதி மீண்டும் திறப்பு

கொழும்பு, ஓக. 05

பாறைச் சரிவு காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கொழும்பு - கண்டி பிரதான வீதியின் கடுன்னாவ பகுதி மீண்டும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் நிலவிய சீரற்ற வானிலையால் கடுன்னாவ பகுதியில் பாறைச் சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, கணேதென்ன மற்றும் கடுன்னாவ இடையிலான வீதிப் பகுதி பாதுகாப்பு கருதி தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

பின்னர் வானிலை சீரடைந்ததைத் தொடர்ந்து, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நேற்றுக் காலை 6.00 மணி முதல் குறித்த வீதி மீண்டும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, மண்மேடு சரிவு காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த ஹற்றன் - கினிகத்தேனை வீதியும், ஹெம்மாதகம - கம்பளை வீதியும் மீண்டும் போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.08.2026 புதன்கிழமை
பராபவ வருடம், ஆடி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசியலமைப்பு திருத்தம் குறித்த சந்தேகம்

சட்டத்துறைச் சமூகம் மற்றும் எதிரணி கட்சிகளிடமிருந்து கிளம்பியிருக்கும் கடுமையான எதிர்பபை கிஞ்சித்தேனும் பொருட் படுத்தாமல் மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதற்கான அதன் திட்டத்தை முன்னெடுப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியாக இருக்கிறது என்று தெரிகிறது.

உத்தேச அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் சட்டமா அதிபரிடமிருந்து அனுமதி கிடைத்ததும் அடுத்த மாத முற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரம் ஒன்றை மேற்கோள் காட்டி வாரஇறுதியில் செய்திகள் வெளியாகியிருந்தன.

உத்தேச திருத்தத்தில் உள்ளடங்க வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகள் ஏற்கெனவே சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் திருத்தச் சட்டமூலம் இடம் பெற்றதும் அதை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியும். உயர் நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைத்ததும் பாராளுமன்றத்தில் அதை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்றும் நவம்பரில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக இந்த செயன்முறைகளை நிறைவு செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அந்த அரசாங்க உயர்மட்ட வட்டாரம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறது.

உத்தேச திருத்தத்தின் கீழ் உயர்நீதிமன்ற நீதிபதியின் ஓய்வுபெறும் வயதெல்லை 65 இலிருந்து 67 ஆகவும் மேற்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியின் ஓய்வுபெறும் வயதெல்லை 63 இலிருந்து 65 ஆகவும் உயர்த்தப்படும். அத்துடன் ஏனைய நீதிபதிகளின் சேவைக் காலமும் இரு வருடங்களால் அதிகரிக்கப்படும்.

அத்துடன் பிரதம நீதியரசர் பதவியில் இருக்கக்கூடிய உச்சபட்ச காலத்தை ஆறுவருடங்களாக மட்டுப்படுத்துவதற்கான ஒரு ஏற்பாடும் உத்தேச திருத்தத்தில் இருப்ப தாக தெரிய வந்திருக்கிறது. பிரதம நீதியரசராகப் பதவி வகிப்பவர் ஓய்வு பெறும் வயதெல்லையை எட்டாவிட்டாலும் கூட, அவர் ஆறு வருடங்கள் பதவியில் இருந்துவிட்டால் ஓய்வுபெறவேண்டும் என்பதே இந்த ஏற்பாட்டின் அர்த்தம்.

இந்த தகவல்களை எல்லாம் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது மேல்நிலை நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதெல்லையை இரு வருடங்களினால் அதிகரிப்பது மாத்திரமல்ல, நீதித்துறை கடமைப்புக்குள் வேறு பல மாற்றங்களையும் செய்வது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கிறது என்று தெரிகிறது.

புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசிங்க உட்பட அரசாங்க தலைவர்கள் கூறிவரும் நிலையில், நீதித்துறைச் சீர்திருத்தங்களை அந்த செயற்பாடுகளுக்குள் விரிவான முறையில் செய்வதற்கான வாய்ப்பு இருக்கும் போது தற்போது திருத்தம் ஒன்றின் மூலமாக சில சீர்திருத்தங்களை செய்வதில் அரசாங்கம. காட்டும் அவசரம் இயல்பாகவே சந்தேகத்தைக் கிளப்புகிறது.

# மீண்டும் ஒரு 1983 ஜூலை நிகழ்வதற்கான எந்தவொரு சாத்தியத்தையும் தடுத்தல்



ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*1983 ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பிறகு நாற்பத்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், போதிய அளவில் அங்கீகரிக்கப் படாத அல்லது நிவர்த்தி செய்யப்படாத ஓர் அநீதியின் சுமையை இலங்கை இன்னமும் சுமந்து கொண்டிருக்கிறது.*

தலைநகர் கொழும்பிலும் நாடு பூராவும் முன்னெப்போதுமில்லாத அளவில் உயிர்கள், வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள் அழிக்கப் பட்டமையானது, அனைத்துப் குடிமக்களையும் சமமாகப் பாதுகாக்கும் அரசின் ஆற்றல் மீதான தமிழ் சமூகத்தின் நம்பிக்கையைச் சிதைத்தது. காலம் கடந்து செல்வது அரசின் பொறுப்பைக் குறைத்துவிடாது அல்லது முன்னோக்கிச் செல்வது என்ற பெயரில் நடந்தவற்றை மூடிமறைத்துவிட முடியாது.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய இழப்பீட்டை வழங்கத் தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் தவறிவிட்டன. மேலும் அண்மையக்காலங்களில் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடுகளுடன் ஒப்பிடும் போது,1983 ஜூலையில் உயிரிழந்தவர்களுக்கும் அழிக்கப்பட்ட சொத்துக்களுக்குமான தீர்க்கப்படாத இழப்பீட்டுப் பிரச்சினையானது, உயிர்தப்பியவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடையே ஒரு ஆழமான மனக் குறையாகவே இருந்து வருகிறது.

இருப்பினும், 1983 ஜூலையின் மனிதாபிமான விளைவுகளுக்குத் தீர்வு காண்பது என்பது அரசுக்குரிய பொறுப்பின் ஒரு பகுதி மட்டுமே. அந்தச் சம்பவங்கள் நிகழ்வதற்குக் காரணமாயிருந்த அரசியல் மற்றும் நிறுவன ரீதியிலான தோல்விகளுக்குத் தீர்வு காண்பதும், அவை மீண்டும் ஒருபோதும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதுமே மிக ஆழமான கடமையாகும்.


நிலையான நல்லிணக்கத்திற்கு, சிறுபான்மையினருக்கு நாட்டின் ஆட்சியில் தமக்குச் பயனுள்ள குரல் உள்ளது என்றும், தங்களது கவலைகள் கேட்கப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நம்பிக்கை இருக்க வேண்டும். இதனால்தான், அதிகாரம் அர்த்தமுள்ள வகையில் பகிர்ந்தளிப்பது மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவது உள்ளிட்ட அரசியலமைப்பு உத்தரவாதங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நல்லிணக்கத்திற்கு மட்டுமல்லாமல், கடந்த காலத் தவறுகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் அத்தியாவசியமானதாகும்.

எனவே, தேசிய சமாதான பேரவை அரசாங்கத்திடம் பின்வருவனவற்றை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

1983 ஜூலையில் அரசின் தோல்விகளை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும் உயிரிழப்பு மற்றும் சொத்து இழப்புகளுக்கான நீண்டகாலமாக நிலுவையிலுள்ள இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண ஒரு நம்பகமான பொறிமுறையை நிறுவ வேண்டும் காணாமல் போனோர் தொடர்பான நடவடிக்கைகளையும் குடிமக்களின் காணிகளை மீள ஒப்படைப்பதையும் விரைவுபடுத்த வேண்டும் நீண்டகாலமாக தாமதிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் மொழிச் சமத்துவத்திற்கான அரசியலமைப்பு உத்தரவாதத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் சிறுபான்மை சமூகங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் வழக்கமான உரையாடலைப் பேணவேண்டும்.

தேசிய நல்லிணக்கத்திற்கு தன்னை அர்ப்பணித்த ஒரு அரசாங்கம், சமூகங்களை சமமான நடத்துவதை வெறும் வாக்குறுதியாக மட்டும் வழங்கக் கூடாது. 1983. ஜூலையின் தோல்விகள் மீண்டும் ஒருபோதும் நிகழாதவாறு, மோதலுக்கான அடிப்படைக் காரணிகளுக்குத் தீர்வு காணும் அதே வேளையில், கடந்த காலத் தவறுகளுக்கு நீதியை வழங்குவதற்கான வெளிப்படையான நடவடிக்கைகளையும் அது எடுக்க வேண்டும்.

# இலங்கையில் நீதிபதிகள் ஓய்வு வயது நீடிப்பு: சர்வதேச நீதிபதிகள் சங்கம் கவலை வெளியீடு



கொழும்பு, ஒக. 05

இலங்கையில் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை இரண்டு ஆண்டுகளால் நீடிப்பதற்கான முன்மொழியப்பட்ட அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் சர்வதேச நீதிபதிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள சர்வதேச நீதிபதிகள் சங்கம், குறித்த முன்மொழிவை தற்போதைய வடிவில் மீள்பரி சீலனை செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

சர்வதேச நீதிபதிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் கட்டாய ஓய்வு வயதை இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் வகையில் அரசாங்கம் அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை நீதிச் சேவைச் சங்கம் மற்றும் பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் வெளியிட்டுள்ள கவலைகளை தாமும் பகிர்ந்து கொள்வதாக சர்வதேச நீதிபதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீதிபதிகளின் ஓய்வு வயதை மாற்றுவது தொடர்பான பொதுவான கொள்கை விடயத்தை விட, இந்தச் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படும் காலம், நடைமுறை மற்றும் அதன் பின்னணி குறித்தே தங்களுக்கு அதிக கவலை இருப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த மாற்றம் அவசரமான அல்லது அழுத்தமான முறையில் மேற்கொள்ளப்படாமல், முறையான ஆய்வு, பரந்த ஆலோசனைகள் மற்றும் வலுவான அரசியலமைப்பு நடைமுறைகளின் அடிப்படையில் அமைய வேண்டும் என சர்வதேச நீதிபதிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மேலும், குறிப்பிட்ட ஒரு நீதிபதி அல்லது சில நீதித்துறை அதிகாரிகளுக்கு சாதகமாக இந்த சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதாக சமூகத்தில் கருத்துக்கள் நிலவினால், அது நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பான நம்பிக்கையை பாதிக்கும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

"அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் எதுவாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட நபருக்கு நன்மை கிடைக்கும் வகையில் சட்டம் உருவாக்கப்பட்டதாக கருதப்படும் நிலைமை கூட நீதித்துறையின் சுயாதீனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும்" என சர்வதேச நீதிபதிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கவலைகளை கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தை தற்போதைய வடிவில் மீளாய்வு செய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிபதிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையின் நீதித்துறை சுதந்திரம் தொடர்பான நிலைமைகளை தொடர்ந்து உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் சர்வதேச நீதிபதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**இடபம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டியநாள்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களுக்கு உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருச்சிகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.பழைய இனிய எதிர்ப்புகள் அடங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

# காணி தொடர்பான பிரச்னைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் குறைவு



யாழ்ப்பாணம், ஓக. 05

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி தொடர்பான பிரச்சினைகள் குறைவாக உள்ளதாக மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் காணி உரித்துச் சான்றிதழ் வழங்கல் திட்டத்தின் செயற்பாடுகளை விரைவுபடுத்தும் நோக்கில், பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில், நடைபெற்றது.

பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே மாவட்ட செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் பணிகளில் எதிர்நோக்கப்படும் சில நடைமுறைச் சவால்கள் மற்றும் தேவைகள் தொடர்பாக மாவட்ட உதவி ஆணையாளர் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் இப்பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள், நில அளவைத் திணைக்களம் உள்ளிட்ட தொடர்புடைய அதிகாரிகள் இந்நிகழ்வில் பங்கேற்றிருப்பதால், நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளைப் பெறுவதற்கான சிறந்த வாய்ப்பாக இதனைப் பயன்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்திட்டம் முதன்முதலாக நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது டன், பின்னர் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

காணி உரிமை தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டாலும், உரிமை ஆவணங்களைத் தயாரித்தல், பதிவு செய்தல் மற்றும் உரிய ஆவணங்களை மக்களிடம் கையளித்தல் போன்ற கட்டங்களில் சில நடைமுறைச் சிரமங்கள் காணப்படுகின்றன.

தனியார் காணிகளின் உரிமையை தெளிவாகவும் சட்ட ரீதியாகவும் உறுதிப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி தொடர்பான பிரச்னைகள் குறைவாக இருந்தாலும், எஞ்சியுள்ள சிக்கல்களுக்கு துரிதமான தீர்வுகளை வழங்குவது அவசியம்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அதிகாரிகள் இக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ள நிலையில், இவ்வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து, மக்களுக்கு அதிகபட்ச நன்மை கிடைக்கச் செய்வதற்காக அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் செயற்பட வேண்டும்-என்றார்.

## கற்கோவளம் முன்பள்ளிக்கு பாடசாலை உபகரணங்கள்!



வடமராட்சி, ஓக. 05

யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம் புனித நகர் புரட்சி முன்பள்ளி மாணவர்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியினரால் பாடசாலை பை மற்றும் கற்றல் உபகாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு தமிழ் மக்கள் கூட்டணியின் வடமராட்சி இணைப்பாளர் பிரதாபன் தலைமையில் நேற்று முன் தினம் மாலை 5:30 மணியளவில் கற்கோவளம் புனிதநகர் புரட்சி முன்பள்ளியில் இடம்பெற்றது.

இதில் சட்டத்தரணியும், முன்னாள் மாநகர முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் துணைச் செயலாளருமான விஷ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தர்களான வீரா, க. விஷ்ணு ஆகியோரும் கலந்துகொண்டு பாடசாலை உபகரணங்களை வழங்கினர். (அ)

## யாழில் பறிமுதல் செய்யப்பட்ட கடலட்டைகள் 11 இலட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை!



யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணத்தில் இருந்து உரிய அனுமதிப் பத்திரங்களின்றி சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு 11 இலட்சத்து 19ஆயிரத்து 960 ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவுப் பகுதியில் இருந்து உரிய அனுமதி பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமான முறையில் பட்டா ரக வாகனத்தில் 3ஆயிரத்து 111 கடல் அட்டைகளை எடுத்துச் சென்ற இருவரை கைது செய்த கடற்படையினர், கைதான இருவருடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

இதனை அடுத்து கைதான இருவருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ள கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், மீட்கப்பட்ட கடலட்டைகளை 11 இலட்சத்து 19ஆயிரத்து 960 ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்துள்ளனர். (அ)

## இயக்கச்சியில் வீதி விபத்தில் படுகாயமடைந்த பெண் சாவு!

கிளிநொச்சி, ஓக. 05

கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன் தினம் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற கோர வீதி விபத்தில் படுகாயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

வீதியில் நின்று கொண்டிருந்த குறித்த பெண் மீது, அதே திசையில் பின்னால் சென்று கொண்டிருந்த “ஹைஏஸ்” ரக வாகனம் மோதியதிலேயே விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயங்களுக்குள்ளான பெண்ணை உடனடியாக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கிளிநொச்சி பளையை சேர்ந்த 49 வயதுடைய சந்திரன் சசிகலா ஆவார். இவர் 30 வருடங்களுக்கு மேலாக பல்வேறு சமூக மட்ட அமைப்புக்களில் பணியாற்றியுள்ளார்.

குறித்த விபத்து மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதிபதிகளின் ஓய்வு வயதெல்லை நீடிப்பு: மகாநாயக்க தேரர்களுக்கு அரசு விளக்கம்

கொழும்பு, ஓக. 05

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை இரண்டு ஆண்டுகள் அதிகரிக்கும் அரசின் முன்மொழிவுக்கு எதிர்ப்புகள் வலுத்து வரும் நிலையில், அதன் நோக்கம் குறித்து மகாநாயக்க தேரர்களுக்கு அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மற்றும் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து, நீதிபதிகளின் ஓய்வுவயது நீட்டிப்பு தொடர்பான அரசின் முன்மொழிவை விளக்கினர்.



இதன்போது கருத்து தெரிவித்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லையை நீடிப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியாக தீர்மானித்துள்ளதாகவும், எனினும் இதுகுறித்து சமூகத்தில் தவறான கருத்துகள் பரப்பப்படுவதால் மகாநாயக்க தேரர்களுக்கு உண்மையான நோக்கம் தெளிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், குறிப்பிட்ட ஒருவரை இலக்காகக் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை அமைச்சர் நிராகரித்தார்.

இது தனிப்பட்ட ஒரு நீதியரசரையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ மையப்படுத்தியதல்ல என்றும், நாட்டின் அனைத்து நீதிபதிகளுக்கும் பொதுவாகப் பொருந்தும் வகையிலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

நாட்டில் சீரற்ற வானிலை:

# பரீட்சை ஏற்பாடுகள் குறித்து இன்று விசேட ஆலோசனை

கொழும்பு, ஓக. 05

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை நிலைமையை முன்னிட்டு, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பான ஏற்பாடுகள் குறித்து இன்று விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்தக் கூட்டத்தில், நிலவும் மழையால் பரீட்சை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் அவற்றை சமாளிக்கும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்ன, தற்போது மழையின் தாக்கம் அதிகரித்திருந்தாலும், ஆகஸ்ட் மாதம் பொதுவாக மழை குறைவாகப் பதிவாகும் காலமாகும் என்றும், பருவக்காற்றின் தீவிரத்தால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமை தற்காலிகமானது என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6 ஆம், 7 ஆம், 8ஆம் திகதிகளுக்குப் பின்னர் மழை ஓரளவு குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், உயர்தரப் பரீட்சைகள் 10ஆம் திகதிக்குப் பின்னரே ஆரம்பமாகவுள்ளதால் அதற்குள் தற்போதைய வானிலை தாக்கம் தணியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், 6ஆம் திகதிக்குப் பின்னர் பசிபிக் பெருங்கடல் பகுதியில் உருவாகவுள்ள சூறாவளி நிலைமையின் தாக்கத்தால் நாட்டின் சில பகுதிகளில் மீண்டும் மழைவீழ்ச்சி ஓரளவு அதிகரிக்கக்கூடும் என அஜித் விஜேமான்ன எச்சரித்துள்ளார். (அ)

# உடப்பு, கற்பிட்டியில் கடல் அரிப்பு தீவிரம்!

மீனவ கிராமங்கள் ஆபத்தில்

கொழும்பு, ஓக. 05

புத்தளம் மாவட்டத்தின் உடப்பு மற்றும் கற்பிட்டி பகுதிகளில் தென்மேல் பருவக்காற்றின் தாக்கத்தால் கடலரிப்பு வேகமடைந்துள்ளதுடன், பல மீனவ வாடிகளும் கடற்கரையோர குடியிருப்புகளும் கடுமையான அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



உடப்பு பகுதியில் நேற்று முன் தினம் இரவு கடலலைகள் கரையைத் தாண்டி மீனவ வாடிகளுக்கு அருகிலுள்ள வீதிவரை முன்னேறியதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ள பல மீனவ வாடிகள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, கற்பிட்டிக்கு வடக்கே அமைந்துள்ள கீரிமுந்தல் மீனவ கிராமமும் கடுமையான கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 60 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில், முன்னதாக பாதுகாப்புக்காக அடுக்கப்பட்ட மணல் மூடைகளும் தற்போது பலத்த காற்று மற்றும் கொந்தளிக்கும் கடலின் தாக்கத்தால் அடித்துச் செல்லப்படும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கீரிமுந்தல் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல மீன்பிடிப் படகுகளும் சேதமடைந்துள்ளதுடன், தற்போதைய நிலைமைக்கு உடனடி தீர்வு காணப்படாவிட்டால் முழுக் கிராமமும் கடலரிப்பால் அழியும் அபாயம் இருப்பதாக அப்பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட மீனவர்கள், பருவக்காற்று காலங்களில் கடல் சீற்றம் வழக்கமானதாயினும், இம்முறை நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். கடற்கரை பாதுகாப்பு இல்லையெனில் மீன்பிடித் தொழிலும், தங்களது வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்பதால், கரையோர பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் அவசரமாக முன்னெடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

மத்திய கிழக்கு நெருக்கடி:

# ரூ.71.7 பில்லியன் நிவாரணப் பொதிக்கு அனுமதி வழங்கியது பாராளுமன்றக் குழு

கொழும்பு, ஓக. 05

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் மோதலால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகளை சமாளிக்கும் நோக்கில் ஒதுக்கப்பட்ட 71.7 பில்லியன் ரூபா நிவாரணப் பொதிக்கு பாராளுமன்ற பொதுநிதி தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், 2026 ஆம் ஆண்டுக்கான மேலதிக மதிப்பீட்டு அறிக்கை இலக்கம் 03 இன் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு குறித்து ஆராயப்பட்டதுடன், அதன் பயன்பாடுகள் தொடர்பாக அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இதன்படி, எரிபொருள் இறக்குமதி செலவு அதிகரிப்பால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்து தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்காக 52.8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மே மற்றும் ஜூன் மாதங்களில் வழங்கப்பட்ட எரிபொருள் மானியங்களுக்கான செலவுகளும் இதில் அடங்குகின்றன.

மீதமுள்ள 18.9 பில்லியன் ரூபா, எரிபொருள் மானியம், சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கான உர உதவி மற்றும் மீன்பிடித் துறைக்கான உதவிகளுக்காக பயன்படுத்தப்பட்ட அவசர நிதியை மீள நிரப்புவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை மின்சார சபைக்கு 15 பில்லியன் ரூபா, அஸ்வெசும திட்டத்திற்கு 8.2 பில்லியன் ரூபா, விவசாயத்துறைக்கு 3 பில்லியன் ரூபா, சிறு தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு 2.2 பில்லியன் ரூபா மற்றும் மீன்பிடித் துறைக்கு 1.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு 2026 ஆம் ஆண்டுக்கான அரசின் செலவின அல்லது கடன் பெறும் வரம்புகளை அதிகரிக்காது என்றும், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 500 பில்லியன் ரூபா மேலதிக மதிப்பீட்டு நிதியில் பயன்படுத்தப்படாமல் இருந்த தொகையிலிருந்தே இந்த நிதி வழங்கப்படுவதாக அதிகாரிகள் பாராளுமன்றக் குழுவுக்கு அறிவித்துள்ளனர்.

# டெங்கு அபாயம் தொடர்கிறது: 3 நாட்களில் 1,598 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 05

நாட்டில் டெங்கு நோயின் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் ஜனவரி முதல் ஒகஸ்ட் 3 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 86,947 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஒகஸ்ட் மாதத்தின் முதல் மூன்று நாட்களிலேயே 1,598 புதிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமை, நோய் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது.

மாகாண வாரியான தரவுகளின்படி, மேல் மாகாணத்தில் அதிகபட்சமாக 45,976 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து மத்திய மாகாணத்தில் 7,623 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 7,175 பேரும், ஊவா மாகாணத்தில் 2,416 பேரும் டெங்கு தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் தங்கள் வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள நீரை அகற்றி, கொசு பெருகும் இடங்களை ஒழிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# நாட்டில் வெள்ள நிலைமை மேலும் மோசமடையும் அபாயம் இல்லை!

நீர்ப்பாசனத் திணைக்களம்

கொழும்பு, ஓக. 05

நாட்டில் தற்போது நிலவும் வெள்ள நிலைமை மேலும் தீவிரமடையும் அபாயம் இல்லை என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் பெரும்பாலான பகுதிகளில் மழைப்பொழிவு குறைவடைந்துள்ளதால் முக்கிய ஆறுகளின் நீர்மட்டமும் படிப்படியாகக் குறைந்து வருவதாக நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் பொறியியலாளர் எல். எஸ். சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

அவரின் கூற்றுப்படி, மகாவலி கங்கையின் நாவலப்பிட்டி மற்றும் பேராதனை பகுதிகளிலும், களனி கங்கையின் கித்துல்கல மற்றும் நோர்வூட் பகுதிகளிலும் நீர்மட்டம் குறைந்து வருகிறது. கித்துல்கல பகுதியில் சிறியளவு அதிகரிப்பு பதிவாகியிருந்தாலும் அது அபாயகரமான நிலைமை அல்ல என அவர் குறிப்பிட்டார்.

மேலும், அவிசாவளை, லென்கொஸ் மற்றும் ஹங்வெல்ல உள்ளிட்ட களனி கங்கையை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நிலைமை மேலும் மோசமடையும் சாத்தியம் இல்லை என்றும், களு கங்கையின் இரத்தினபுரி மற்றும் மில்லகந்த பகுதிகளிலும் நீர்மட்டம் குறைந்து வருவதால் வெள்ள அபாயம் காணப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

நில்வள கங்கை, கிங் கங்கை, அத்தனகல்லு ஓயா மற்றும் மகா ஓயா ஆகியவற்றிலும் அபாய நிலை எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட சூரியபண்டார, குறைவான மழையே எதிர்பார்க்கப்படுவதால், நீர்மட்டத்தில் சிறிய மாற்றங்கள் ஏற்பட்டாலும் வெள்ள அபாயம் உருவாகாது என தெரிவித்தார். (அ)

# கினிகத்தேனை நிலச்சரிவில் சிக்குண்டு காணாமல்போன 4 பேர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஓக. 05

நுவரெலியா மாவட்டத்தின் கினிகத்தேனை, பொல்பிட்டிய பகுதியில் ஏற்பட்ட திடீர் நிலச்சரிவில் காணாமல் போன நால்வரின் சடலங்களும் தேடுதல் நடவடிக்கைகளின் போது மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் பலத்த மழையால் ஏற்பட்ட மண்சரிவின் காரணமாக இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினரும், பொலிஸாரும், பிரதேச மக்களும் இணைந்து தீவிர தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை முன்னெடுத்தனர்.

முதற்கட்டமாக பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து, பின்னர் மேலும் இரண்டு பெண்களினதும் ஒரு ஆணினதும் சடலங்கள் மீட்கப்பட்டதாக பொல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நிலச்சரிவால் உயிரிழந்தவர்களின் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் முதல் மோட்டார் சைக்கிள் பிரத்யேக பாதை களுவாஞ்சிக்குடியில்!

மட்டக்களப்பு, ஒக. 05

இருசக்கர வாகன விபத்துகளைக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, இலங்கையின் முதலாவது மோட்டார் சைக்கிள்களுக்கான பிரத்தியேகப் பாதையை மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியில் அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பெருநிறுவன மோட்டார் சைக்கிள் பாதுகாப்புத் திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றிய அமைச்சர், மோட்டார் சைக்கிள் தொடர்பான விபத்துகள் நாட்டில் வீதிப் பாதுகாப்புக்கான முக்கிய சவாலாக உருவெடுத்துள்ளதாகவும், அதற்குத் தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

றப்பர் தடுப்புகள் மூலம் ஏனைய வாகனப் போக்குவரத்திலிருந்து பிரிக்கப்பட்ட தனிப் பாதைக்கான திட்டமிடல் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாகவும், எதிர்வரும் மாதங்களில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மலேசியா உள்ளிட்ட நாடுகளில் இத்தகைய தனிப் பாதைகள் மோட்டார் சைக்கிள் விபத்துகளை கணிசமாகக் குறைத்துள்ள அனுபவத்தின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

களுவாஞ்சிக்குடி பகுதியில் மோட்டார் சைக்கிள் பயன்பாடு அதிகமாக இருப்பதால் அப்பகுதி முன்னோடித் திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இந்த முயற்சி வெற்றியடைந்தால் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

# கண்டி, கேகாலை, நுவரெலியாவில் மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை நீடிப்பு

கொழும்பு, ஒக. 05

கண்டி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்து அமுலில் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

அதன்படி, கண்டி மாவட்டத்தின் உடுதும்பர, கங்க இஹள கோரளை மற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்கும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ மற்றும் நோர்வூட் பிரதேசங்களிலும் மண்சரிவு அபாயம் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள அனைத்து பாடசாலைகளும் நேற்று மூடப்பட்டதாக மத்திய மாகாண கல்விச் செயலாளர் மதுபானி பியசேன தெரிவித்துள்ளார்.

மேலும், மோசமான வானிலை நிலைமையை முன்னிட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

# திருக்கோவில் நெல் கொள்வனவில் பாரிய தராசு மோசடி முறியடிப்பு!

## விவசாயிக்கு ரூ.2.5 இலட்சம் இழப்பு தவிர்ப்பு

அம்பாறை, ஒக. 05

திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நெல் கொள்வனவின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய தராசு மோசடி, பிரதேச சபையின் தவிசாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் மற்றும் உத்தியோகத்தர்களின் துரித நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டுள்ளது.


நெல் விற்பனைக்காக நிறுவை மேற்கொண்டிருந்த விவசாயி ஒருவர், தராசில் முறைகேடு இருப்பதை அவதானித்து உடனடியாக பிரதேச சபை தவிசாளருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்குச் சென்ற அதிகாரிகள் தராசை பரிசோதித்தபோது, பிழையான அளவீடு காட்டப்பட்டமை உறுதி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடனடி தலையீட்டின் மூலம் குறித்த விவசாயிக்கு ஏற்படவிருந்த சுமார் 2.5 இலட்சம் ரூபாய் நிதி இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இதையடுத்து, மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நெல் கொள்வனவாளர்கள் பிடிக்கப்பட்டு, மேலதிக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அறிக்கை வெளியிட்ட திருக்கோவில் பிரதேச சபை, இது போன்ற தராசு மோசடிகள் இதற்கு முன்னரும் இடம்பெற்றிருக்கக்கூடும் எனக் குறிப்பிட்டதுடன், நெல் விற்பனையின் போது விவசாயிகள் விழிப்புடன் இருக்குமாறும், சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் ஏற்பட்டால் உடனடியாக பிரதேச சபைக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது. மேலும், மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளது. (அ)

# உலக வங்கிப் பிரதிநிதிகளுடன் ஆளுநர் கிழக்கு அபிவிருத்தி குறித்து ஆலோசனை



திருமலை, ஒக. 05

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி வாய்ப்புகள் தொடர்பாக, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவினருக்கு இடையிலான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன் தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

துடிப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சாத்தியமான பொருளாதாரங்கள் மூலம் பிராந்திய வலுவூட்டல் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வாய்ப்புகள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது. கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் கே. குணநாதன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தின் போது, கொட்பேவளைகுடா மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்தி வலயம் மற்றும் அருகம்பே சுற்றுலா அபிவிருத்தி வலயம் ஆகிய மூன்று முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், அவற்றின் எதிர்கால முன்னெடுப்புகள் தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்தின் கீழ், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தேவையான அனுமதிகள் மற்றும் ஒப்பந்தங்கள் நிறைவடைந்த பின்னர், இந்தத் திட்டம் 2027 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# 24½ பவுண் தங்க நகைகள் 24 மணி நேரத்தில் மீட்பு!

## யுவதி பொலிஸாரால் கைது



மட்டக்களப்பு, ஒக. 05

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணையில் உள்ள வீடொன்றில் திருடப்பட்ட 24½ பவுண் தங்க நகைகளை 24 மணி நேரத்திற்குள் பொலிஸார் மீட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவத்தில், தாலிக்கொடி, கைவளையல்கள், தோடுகள், கைச்சங்கிலி உள்ளிட்ட 24½ பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தன. இதையடுத்து, வீட்டின் உரிமையாளர்கள் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தீவிர விசாரணையின் மூலம் 24 மணி நேரத்திற்குள் திருடப்பட்ட அனைத்து தங்க நகைகளும் மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் யுவதி ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளில், கைது செய்யப்பட்ட யுவதி வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதுடன், சம்பவம் இடம்பெற்ற வீட்டில் தங்கியிருந்து கல்வி கற்று வந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது. சந்தேகநபரும் மீட்கப்பட்ட நகைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரதீப் களுபாலவின் வழிகாட்டுதலிலும், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்னவின் பணிப்புரையிலும், களுவாஞ்சிகுடி பதில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். யூட் றொமேஸின் கண்காணிப்பில், பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஜே. பி. ஜோய் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணையின் மூலம் இந்த வழக்கு 24 மணி நேரத்திற்குள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சம்மாந்துறையில் இரண்டு நாட்களில் 550 பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை!



அம்பாறை, ஒக. 05

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற விசேட இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாமின் மூலம் சுமார் 550 நோயாளர்களுக்கு வெற்றிகரமாக சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு பார்வை மீட்பு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் சுகாதார வரலாற்றில் முக்கிய நிகழ்வாகக் கருதப்படும் இந்த முகாம், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் ஒகஸ்ட் 1 மற்றும் 2 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இலங்கை கண் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த விசேட கண் மருத்துவ நிபுணர்கள் நேரடியாக பங்கேற்று சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டனர். முதலாம் நாளில் 300 பேருக்கும், இரண்டாம் நாளில் 250 பேருக்கும் கண்புரை சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாம் நிறைவையொட்டி, மருத்துவச் சேவையில் பங்களித்த விசேட மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள், பின்னணி ஊழியர்கள், தொண்டர்கள் மற்றும் அனுசரணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது. இதில் அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### மஹர சிறை...

இதன்போது கைதிகள் சிறைச்சாலையின் சமையலறை, உணவகம், மருத்துவப் பிரிவு மற்றும் பிரதான சிறை அதிகாரியின் அலுவலகம் உள்ளிட்ட பல முக்கிய பகுதிகளுக்குத் திட்டமிட்டு தீ வைத்ததுடன், பிரதான நுழைவாயிலை நோக்கி கற்களை வீசியதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக கண்ணீர் புகைக்குண்டுகள் மற்றும் இறப்பர் குண்டுகளை பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒகஸ்ட் 2 ஆம் திகதி பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் சிறை அதிகாரிகள் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு நிலைமையை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, கைதிகளை மீண்டும் அவர்களது அறைகளுக்கு அனுப்பியதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் ஒரு கைதி உயிரிழந்ததுடன், எட்டு கைதிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறை அதிகாரிகள் எவருக்கும் உயிரிழப்போ காயமோ ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

மேலும், அண்மையில் இடம்பெற்ற நீர்கொழும்பு சிறைச்சாலை கலவரத்துடன் ஒப்பிடுகையில், மஹர சிறைச்சாலையில் நடந்தது சிறை நிர்வாகத்துக்கு எதிராக நடத்தப்பட்ட நேரடி தாக்குதலாக இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இவ்வளவு அதிகமான கைதிகள் எவ்வாறு ஒரே நேரத்தில் ஒருங்கிணைக்கப்பட்டனர், வெளிப்புற தொடர்பு இருந்ததா என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மஹர சிறைச்சாலையை செயலிழக்கச் செய்வதே இந்தச் சம்பவத்தின் நோக்கமாக இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட்ட அமைச்சர், சதித்திட்டத்தில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தற்போது சிறைச்சாலையின் நிலைமை முழுமையாக கட்டுப்பாட்டில் இருப்பதுடன், இதுபோன்ற சம்பவங்கள் ஏனைய சிறைச்சாலைகளுக்கு பரவாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (அ)

### இந்திய வெளிவிவகார...

நடைமுறைப்படுத்துதல், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தியாவின் ஆதரவு மற்றும் அழுத்தத்தை தமிழ் அரசியல் கட்சிகள் கோரவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய வெளிவிவகார செயலரின் விஜயம், இலங்கை - இந்தியா இருதரப்பு உறவுகள் மற்றும் இனப்பிரச்னை தொடர்பான அரசியல் விவகாரங்கள் குறித்து முக்கிய கவனம் பெற்றுள்ளது.

### அழைப்பாணை...

தொடர்பான விசாரணை, கொழும்பு பிரதம நீதவான் அஸங்க எஸ்.போதரகம முன்னிலையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, யோஷித ராஜபக்ஷ மற்றும் வசந்த கரன்ன கொட ஆகிய இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதவான், குறித்த உத்தரவை பிறப்பித்தார்.

யோஷித ராஜபக்ஷ மற்றும் வசந்த கரன்னகொட ஆகியோருக்கு எதிராக, எட்டு குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய குற்றப்பத்திரிகையை கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

வசந்த கரன்னகொட கடற்படைத் தளபதியாகப் பதவி வகித்த 2006 செப்ரெம்பர் 1 முதல் 2007 ஜூன் 8 வரையான காலப்பகுதியில், யோஷித ராஜபக்ஷவுக்கு பிரித்தானிய அரச கடற்படை கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை சட்ட நடைமுறைகளை மீறி ஏற்படுத்திக் கொடுத்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த பயிற்சியைப் பெறுவதற்கான தேவையான தகுதிகள் இல்லாத நிலையிலும், அரச நிதியை பயன்படு த்தி யோஷித ராஜபக்ஷ இந்தச் சலுகையை முறையற்ற வகையில் பெற்றுக்கொண்டதாகவும், இதனால் அரசுக்கு நிதி இழப்பு ஏற்பட்டதாகவும் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகவே இருவரும் அழைப்பாணை கிடைத்த பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது. (அ)

### செம்மணி புதைகுழி...

மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், 42ஆம் நாளான ஜூலை 24ஆம் திகதியுடன் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவை நேற்று செவ்வாய்க்கிழமை 43ஆம் நாள் பணிகளாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்றைய அகழாய்வின் போது புதிதாக மேலும் நான்கு எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டதுடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட இரண்டு எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. மேலும், ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதியும் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மழை அங்கியுடன் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடும் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டது. அதனுடன் மீட்கப்பட்ட மழை அங்கி, பொத்தான்கள் மற்றும் காலுறை ஆகியவை சான்றுப் பொருட்களாக பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களாக இதுவரை மொத்தம் 97 நாட்கள் அகழாய்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை 483 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 481 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### ஒழுக்கமான பொலிஸ்...

பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் சேவையில் மனிதவள பற்றாக்குறை காணப்படுவதை ஏற்றுக்கொண்ட அமைச்சர், அதனை நிவர்த்தி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இதற்கமைய, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த 10,000 பேர் பொலிஸ் சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 6,000 பேர் தற்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், புதிய பொலிஸ் அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெற்று வருவதாகவும், 200 சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர்கள் தற்போது பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை உள்ளிட்ட பிரிவுகளுக்கான புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்குள் 7,800 பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும், இதன் மூலம் கீழ்நிலை பொலிஸ் அதிகாரிகள் மீது காணப்படும் பணிச்சுமையை குறைத்து, சேவையின் செயல்திறனை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் திணைக்களத்தின் மனிதவள பற்றாக்குறையை சமாளித்து, மக்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் குறிப்பிட்டார். (அ)

### சீரற்ற காலநிலை...

முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 290 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 3,538 பேர் தற்போது 51 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்ட மாவட்டமாக பதிவாகியுள்ளது. அங்கு மட்டும் 1,438 குடும்பங்களைச் சேர்ந்த 5,445 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த உயிரிழப்புகளில் 6 மரணங்கள் அந்த மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### யாழ்.சர்வதேச...

விழாவில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், கடந்த ஒன்றரை ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக கூறினார்.

அதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், எனினும் இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் நிர்வாகப் பிரச்னைகள் காரணமாக அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட்டு, அடுத்த 1 முதல் 2 மாதங்களுக்குள் பணிகள் மீளத் தொடங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

யாழ்ப்பாண நகரில் உள்ளரங்க விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டமும் முன்னெடுக்கப்பட்டு, செப்ரெம்பர் மாதத்திற்குள் நிறைவடைய திட்டமிடப்பட்டிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் அரசியல் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் காரணமாக அந்தத் திட்டமும் தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் இடைநிறுத்தப்பட்டுளளதாக அவர் தெரிவித்தார்.

அந்த வழக்கு முடிவடைந்தவுடன் உள்ளரங்க விளையாட்டு அரங்கத்தின் நிர்மாணப் பணிகளும் உடனடியாக மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதியளித்தார். (அ)

### யாழ்.சர்வதேச...

நிறைவடைந்தது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்ட செயலர் ம. பிரதீபனும் கலந்து கொண்டார். காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடைமுறைகள் குறித்து அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

இதன்போது, இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முன் சத்தியக் கடதாசியில் கையொப்பமிடுமாறு அதிகாரிகள் கோரியதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், அந்தச் சத்தியக் கடதாசியில் வழங்கப்படவுள்ள இழப்பீட்டுத் தொகை, காணியின் விவரங்கள் உள்ளிட்ட முக்கிய தகவல்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால் அதில் கையொப்பமிட முடியாது எனக் காணி உரிமையாளர்கள் மறுப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து அதிகாரிகளுக்கும் காணி உரிமையாளர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக சபா மண்டபத்திற்குள் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பெருமளவான காணி உரிமையாளர்கள் கூட்டத்தை புறக்கணித்து வெளியேறியதுடன், தெளிவான தகவல்களும் சட்டப்பூர்வ உறுதிப்பாடுகளும் வழங்கப்பட்ட பின்னரே இழப்பீட்டு நடைமுறைகளில் ஒத்துழைப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (அ)

### குட்டிமணி, தங்கத்துரை...

நகரசபை உப தவிசாளர் கந்தசாமி சதீஸ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார். அதன் பின்னர் சிலை நிறுவுவதற்கு இடைக்காலத் தடை அமுலில் இருந்து வந்தது.

இவ்வழக்கு நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேலதிக புலனாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக அரச சட்டத்தரணி கால அவகாசம் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வழக்கை இன்று வரை ஒத்திவைத்ததுடன், அதுவரை சிலை நிறுவுவதற்கான தற்காலிகத் தடையையும் நீடித்துள்ளது.

வழக்கு விசாரணையின்போது, கந்தசாமி சதீஸ் சார்பில் மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா, சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட ஐந்து சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

இதற்கிடையில், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் ஞானேந்திரன், சமூக ஆர்வலர் எஸ். கஜந்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட பொறுப்பாளர் ஈசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் க. கணேசகுமாரன் உள்ளிட்டோரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர். (அ)

### மகாநாயக்கர்களின்...

ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர், "இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ள வகையில் எனக்கு எந்தக் கடிதமும் கிடைக்கவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் அவ்வாறான கடிதம் கிடைத்துள்ளதா என்பது குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை. எனவே, 'ஆராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு என்னிடம் எந்தக் கடிதமும் இல்லை" என தெரிவித்தார்.

நீதிபதிகளின் ஓய்வு வயதை நீடிப்பது தொடர்பான விடயம் குறித்து தானும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவும் மகாநாயக்க தேரர்களை சந்தித்து கலந்துரையாடியதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்த சந்திப்பின்போது, முன்மொழியப்பட்ட திருத்தம் தொடர்பில் மகாநாயக்க தேரர்களிடம் முழுமையான மற்றும் சரியான தகவல்கள் இருக்கவில்லை எனவும், பின்னர் உரிய விளக்கங்கள் வழங்கப்பட்டதையடுத்து, தேவையான கலந்துரையாடல்களை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் தெரிவித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

மகாநாயக்க தேரர்களின் நான்கு பீடங்களும் இந்த அரசியலமைப்பு திருத்தம் பொருத்தமானதல்ல என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும், அந்த நிலைப்பாடு ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் தமக்கு அறிவித்ததாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

### வடக்கில் சிறுபோக...

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை உற்பத்தி உள்ளிட்ட துறைகளின் 2026ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

2026ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வடக்கு மாகாணத்தில் 37,961 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை விட அதிகமாக 38,405 ஹெக்ரேயர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் சுமார் 156,326 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நாற்று மாற்று நெற்செய்கை, பராசூட் நாற்று நடவு முறை மற்றும் யாயா அடிப்படையிலான நெற்செய்கைத் திட்டங்கள் உள்ளிட்ட நவீன விவசாய முறைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும், சில பகுதிகளில் ஒரு ஹெக்ரேயருக்கு ஆறு மெட்ரிக் தொனுக்கும் அதிகமான விளைச்சல் பதிவாகியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீர்வள முகாமைத்துவத்தை அறிவியல் அடிப்படையில் முன்னெடுத்து, விவசாயிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் வன்னேரிக்குளத்தில் மூன்றாம் போகச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கால்வாய் மற்றும் நீர்த்தேக்க புனரமைப்பு பணிகள், விவசாயிகளுக்கான நீர்விநியோக வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் ஆகியவை திட்டமிட்ட கால அட்டவணைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சில செயற்திட்டங்கள் முழுமையான செயற்பாட்டு நிலையை அடையாதமை தொடர்பிலும் ஆராயப்பட்டதுடன், அவற்றை விரைவாக மீளச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் இயங்கும் அம்மாச்சி உணவகங்களில் ஒரே தரமான நடைமுறைகளை பின்பற்றவும், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று முறைகளை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முழு ஒத்துழைப்புக்கு தயார்!

### 6 தமிழ் பேசும் கட்சிகளிடம் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஒக. 05

மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துதல் மற்றும் அவற்றுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்குதல் உள்ளிட்ட தமிழ் பேசும் மக்களின் நீண்டகால பிரச்சினைகளுக்கு தீர்வு காண, பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தமிழ்பேசும் மக்களின் நலன்களை முன்னிறுத்தி ஆக்கபூர்வமாக இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள ஆறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதன்போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கம், நீண்டகாலமாக பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துதல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், மலையக மக்களுக்கு காணி உரிமைகளை வழங்குதல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் முன்வைத்த நிலைப்பாடுகள் குறித்தும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவருக்கு விளக்கமளித்தனர்.

இதற்கு பதிலளித்த சஜித் பிரேமதாஸ, மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கும், மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதற்கும் தாம் ஆதரவளிப்பதாக தெரிவித்தார். குறித்த விடயங்களில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தேவையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

## வழக்குகளை துரிதப்படுத்த பாராளுமன்ற விசேட குழு கோரி சஜித் தரப்பு பிரேரணை!



கொழும்பு, ஒக. 05

நீதிமன்றங்களில் குவிந்துள்ள வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்தும் நோக்கில் பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமிக்கக் கோரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் பிரேரணையொன்றை கையளித்துள்ளது.

நீதி அமைச்சின் தரவுகளின்படி, தற்போது இலங்கையின் நீதிமன்ற முறைமையில் சுமார் 1.1 மில்லியன் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலைமையை கருத்தில் கொண்டு, வழக்குகளின் செயலாக்கத்தை துரிதப்படுத்த தேவையான பரிந்துரைகளை முன்வைக்கும் வகையில் பாராளுமன்ற விசேட குழுவொன்றை அமைக்க வேண்டும் என பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

நேற்று முன் தினம் கையெழுத்திடப்பட்ட இந்தப் பிரேரணை, நேற்று சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்ற சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. (அ)

## தொல்புரத்தில் மூலிகை மருத்துவக் கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஒக. 05

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் மூலிகை மருத்துவக் கண்காட்சியும் இலவச மருத்துவப் பரிசோதனை முகாமும் நாளை வியாழக்கிழமை தொல்புரம் சிவ பூமி முதியோர் இல்லத்தில் காலை 9.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஆயுள்வேத பாதுகாப்புச் சபைத் தலைவர் சித்த மருத்துவர் வெற்றிவேல் சக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீட பீடாதிபதி கலாநிதி விவியன் சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பீடத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மூலிகை மருத்துவம் தொடர்பான பல்வேறு காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும், பொதுமக்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகளும், சித்த மற்றும் ஆயுள்வேத மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதால், ஆர்வமுள்ள அனைவரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

## போலி கனடா வேலைவாய்ப்பு வாக்குறுதி:

## எத்தியோப்பியாவில் கடத்தப்பட்ட மூன்று இலங்கையர்களும் மீட்பு!

கொழும்பு, ஒக. 05

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி எத்தியோப்பியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கடத்தப்பட்ட மூன்று இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரின் அறிவுறுத்தலின் பேரில், துபாய் ஊடாக எத்தியோப்பியாவுக்குச் சென்ற யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த மூவர், அங்கு செயற்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட வெளிநாட்டு குற்றக் குழுவினால் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கடந்த மே 27ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மனிதக் கடத்தல், சட்டவிரோத குடியேற்ற விசாரணை மற்றும் கடல்சார் குற்றங்கள் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்தது.

விசாரணைகளில், வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் கூறி பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சந்தேகநபர் சுமார் 64 இலட்சம் ரூபா பணத்தை பெற்றிருந்தமை தெரியவந்துள்ளது. மேலும், கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்கான பணம் எனக் கூறி அவர்களது உறவினர்களிடமிருந்து சுமார் 2 கோடி ரூபா வரை பெற்றுள்ளதாகவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கடத்தல் குழுவுக்கும் சந்தேகநபருக்கும் இடையிலான தொடர்புகள் கண்டறியப்பட்டதையடுத்து, நெடுங்கேணி பகுதியில் தலைமறைவாக இருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, அடிஸ் அபாபா பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட இராஜதந்திர அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம், கடத்தப்பட்ட மூன்று இலங்கையர்களும் ஜூன் 6ஆம் திகதி எத்தியோப்பிய அதிகாரிகளால் மீட்கப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் பிரஜைகள் நால்வரும், எத்தியோப்பிய பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

26 முதல் 34 வயதுக்குட்பட்ட குறித்த மூன்று இலங்கையர்களும் ஒகஸ்ட் முதலாம் திகதி நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதக் கடத்தல் வலையமைப்புடன் சந்தேகநபருக்குள்ள முழுமையான தொடர்புகள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. (அ)

## நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் ரூபா 40 மில்லியன் செலவில் தொழில்நுட்ப கூடம்!

வவுனியா, ஒக. 05

வவுனியா, நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்திற்காக ரூ.40 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப ஆய்வுகூடக் கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது. கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆய்வுகூடத் தொகுதியின் மூலம் குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 1,700 மாணவர்கள் நேரடியாகப் பயனடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் ஆர். தமிழழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன் மற்றும் சி. திலகநாதன், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)

## தனிநாயகம் அடிகளார் நினைவரங்கம் யாழில்!

யாழ்ப்பாணம், ஒக. 05

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும், தமிழ்ச் சங்கமும், தமிழி அமைப்பும் இணைந்து நடத்தும் வண. பேராசிரியர் எஸ். தனிநாயகம் அடிகளார் நினைவரங்கம் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் செல்வி செ. சிவசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆசியுரையும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் முதுநிலை பேராசிரியர் தி. வேல்நம்பி மற்றும் யாழ் பல்கலைக்கழக கப்பீட பீடாதிபதி பேராசிரியர் நா. பிரதீபராஜா ஆகியோர் வாழ்த்துரையும் வழங்கவுள்ளார்கள்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத் தலைவர் அரசர் அருளாளர் தொடக்கவுரையும், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றச் செயலாளர் டி. ஞானசேகரன் சிறப்புரையும் ஆற்றவுள்ளார்கள். திருமறைக் கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்பணி ஜெரோ செல்வநாயகம் நினைவறிமுகவுரையையும், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலை முதுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் நினைவுரையையும் ஆற்றவுள்ளனர்.

இந்த அரங்கில் ஒரு கை அகரமுதலியும் வெளியிடப்படுகிறது.

மூத்த ஊடகவியலாளர் ந. விஜயசுந்தரம் வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சைவ சித்தாந்தத் துறைத் தலைவர் முனைவர் தி. செல்வமனோகரன் அறிமுகவுரையையும், ஐப்பான் கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் முனைவர் ச. மனோன்மணி தொகுப்புரையும் வழங்கவுள்ளார்கள். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org